முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 785**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

22.11.2021, திங்கட்கிழமை

1. பிரணவ சக்தியே அரங்கா போற்றி
பிரணவ சித்தியே தேசிகா போற்றி
தரணியை காத்திட மாதவசியாக
தண்டாயுதன் என் அவதாரமாக வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென உன் சக்திகொண்டு
வையகத்தை யான் மாற்ற இருக்க
3. இருக்கவே அரங்கன் நீ தருகின்ற
இணையில்லாத ஞான உபதேசங்கள்
கருத்தாக உலக மக்களிடை பரவி
கலியுகம் ஞான யுகமாக மாற்றம் பெறும்
4. மாற்றம் தர அரங்கன் உன்னை மாதவசியாக
மண்ணுலகில் அவதாரம் நிகழ்த்தி உள்ளேன்
ஆற்றல்பட உன் தர்மம் சன்மார்க்கத்தை
அகிலத்தார் ஏற்றுக்கொண்டால் போதும்
5. போதுமப்பா கலியுகம் தானாகவே
புண்ணிய சக்திபெற்று ஞானயுகமாக
அழியாமை என்கின்ற மாந்தர்களோடு
ஆற்றல்பட பெருமாற்றம் காணக்கூடும்
6. கூடவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
குறையில்லாத தர்மவான் என்பதிலே
நாடெங்கிலும் உணர்த்தப்பட்டு உலகமக்கள்
ஞானமாக உன்வழியை ஏற்று வந்தால்
7. வந்திட அற்புதம் சடுதி காணும்
வையகம் ஞான ஆட்சி காணக்கூடும்
சிந்தைவைத்து ஆறுமுகன் யான் உன்னுள்ளே
சித்திகளை நித்தம்நித்தம் அருளிவர
8. வருகின்ற அரங்கன் தொடர்பு வழி
வையகம் பெருமாற்றம் காணக்கூடும்
தருகின்ற அரங்கன் உபதேசம் வழி
தரணியோர் ஞானிகளாக மாறக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—